**தலைப்பு 296 – ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்**

1. **நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 296 - இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 13 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட ்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள ் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முனக்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏதேனும் குறிப்பான செயற்திட்டமொன்றில் நேரடியே பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக பொருட்கள் மற்றும் உபகரணங்களாக வெளிநாட்டு மூலதன நன்கொடை கிடைக்கும் விடத்து அவ் உறுப்படிகளுக்குரிய ஆவணங்களின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அந் நன்கொடையின் ரூபா பெறுமதி திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் அதன் பெறுமதி யதார்த்தமானதாக காணப்படாத சந்தர்ப்பங்களின் போது வெளிநாட்டு வளங்கள் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டு மதிப்பிடப்பட்ட பெறுமதி கணிக்கப்பட்டு கணக்கிடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் ஐக்கிய அமெரிக்கா தூதரகத்தின் கீழ் நன்கொடயாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த 280,000 ஐ.அ.டொலர்கள் பெறுமதியான இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்ற முறைமை மற்றும் அதற்குரிய 19,100 ஐ.அ.டொலர்கள் பெறுமதியான கணினி | ஐக்கிய அமெரிக்கா தூதரக அலுவலகத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற EXBS நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக திணைக்களத்திற்கு நன்கொடையாக பெறப்பட்ட முறைமையில் மேம்படுத்தலுக்குரிய அடிப்படை நடவடிக்கைகள் 2024 மார்ச் மாதம் நிறைவடைந்தது. அந் நன்கொடை கணினி முறைமை மேம்படுத்தல்கள் மற்றும் அதற்குரிய கணினி வன்பொருள்களை கொண்டாதாகும். இந்த நன்கொடையில் இறுதி நிதிப் பெறுமதி சரியாக கணக்கிடப்படுவதற்காக இயலுமை கிடைக்கப்பெற்றது தற்போது மேற்கொண்டு செல்லப்படுகின்ற மேம்படுத்தல்கள் நிறைவடைந்த பின்னர் மற்றும் அதற்குரிய வன்பொருட்கள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட பின்னராகும். அந் நடவடிக்கைகள் முடிந்த பின்னர் அச் செயற்திட்டத்தின் | நன்கொடைகளின் பெறுமதி குறிப்பாக இனங்காணப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளவாரான பெறுமதி கணிக்கப்பட முடிவதுடன் அப் பெறுமதி கணக்கிடப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாணண்டின் அனுமதிப்பத்திர வருமானத்திற்காக அடிப்படை மதிப்பீடு ரூபா 2,600,000,000 ஆக காணப்பட்டதுடன் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா 2,900,000,000 ஆகியமையினால் ரூபா 300,000,000 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் அது அடிப்படை மதிப்பீட்டில் 12 சதவீத வேறுபாடாகும். அதனால் அடிப்படை மதிப்பீடு தயாரிக்கும் போது இயலுமான வரையில் சரியாக கணிப்புச் செய்யப்படுவதன் தேவை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | அடிப்படை மதிப்பீடு தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் நிலவிய அந்நிய செலாவணி நிலைமைகளின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டிற்காக வருமான மதிப்பீடு தாயரிக்கப்பட்டதுடன் ஆண்டு இடை நடுவில் நிலவிய அந்நிய செலாவணி நிலைமைகள் கருத்திற் கெள்ளப்பட்ட பின்னர் வருமபன மதிப்பீடு திருத்தப்பட்டமையினால் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. | அடிப்படை மதிப்பீடு தயாரிக்கும் போது இயலுமான வரையில் சரியாக மதிப்பீடுகள் கணிப்பு செய்யப்படல் வேண்டும். |

**2.2 செலவின முகாமைத்துவம்**

**2.2.1 மீண்டெழும் செலவீனம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவில் 10 செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 8 சதவீதம் தொடக்கம் 81 சதவீதம் வரையான வீச்சில் நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | உங்கள் அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது. | செலவின மதிப்பீடு தயாரிக்கும் போது, இயலுமான வரையில் சரியாக மற்றும் சிக்கனமாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| **(ஆ)** | மீளாய்வாண்டில் 07 மீண்டெழும் செலவீன விடயங்களின் அடிப்படை மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட செலவீன மதிப்பீட்டில் 22 சதவீதம் தொடக்கம் 37 சதவீதம் வரையான வீச்சில் வேறுபாடுகள் | குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் மற்றும் சதவீதங்களுடன் இணங்கப்படுகின்றது. | -மேற்படி- |

காணப்பட்டன. அதன் பிரகாரம் அடிப்படை மதிப்பீடு தயாரிக்கும் போது கடந்த ஆண்டுகளின் செலவீனங்கள் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டு இயலுமான வரையில் சரியாக செலவீன மதிப்பீடு கணிப்புச் செய்யும் தேவைப்பாடு கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 மூலதன செலவீனம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய மூலதன செலவின விடயங்கள் இரண்டின் அடிப்படை மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீடு இடையே வேறுபாடு 86 சதவீதம் மற்றும் 363 சதவீதம் ஆகும். அதன் பிரகாரம் அடிப்படை மதிப்பீடு தயாரிக்கும் போது இயலுமான வரையில் சரியாக செலவினங்கள் கணிப்புச் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் மற்றும் சதவீதங்களுடன் இணங்கப்படுகின்றது. | செலவின மதிப்பீடு தயாரிக்கும் போது, இயலுமான வரையில் சரியாக மற்றும் சிக்கனமாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான மூலதன செலவின விடயங்கள் 05 இன் தேறிய நிதியேற்பாட்டில் 14 சதவீதும் தொடக்கம் 63 சதவீதம் வரையான வீச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் மற்றும் சதவீதங்களுடன் இணங்கப்படுகின்றது. | -மேற்படி- |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| | அவதானிப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் | 1,267,199 | சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 01 ஆண்டு தொடக்கம் 03 | 2023.08.14 ஆந் திகதி சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட முகாமைத்துவ சேவை | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | XXIV அதிகாரத்தின் 4:5 ஆம் பிரிவு | | ஆண்டுகள் வரையான பழைமையான கடன் மீதிகள் ரூபா 223,269 உம், 1 ஆண்டிற்கு குறைந்த ரூபா 470,177 ஆன கடன் மீதியும் காணப்பட்டது. மேலும், வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதியாக 05 ஆண்டுகளை மிகைத்த ரூபா 335,753 ஆன மீதியும், 01 ஆண்டு தொடக்கம் 03 ஆண்டுகள் பழைமையான ரூபா 238,000 ஆன கடன் மீதியும் காணப்பட்டது. குறிக்கப்பட்ட பிரிவின் பிரகாரம் அக் கடன் தொகைகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | உத்தியோகத்தரின் ஆதனக் கடன் மீண்டும் அறவிடல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு இலங்கை இராணுவ தலைமையகத்திற்கு 2023.09.08 ஆந் திகதி கடிதமொன்றின் ஊடாக தெரிவிக்கப்பட்டது. 2022.03.30 ஆந் திகதி தொடக்கம் பதவியை விட்டுச் சென்ற அலுவலக உதவியாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 223,269 ஆன இடர்கடன் அறவிடப்படுவதற்கு எடுக்கப்பட வேண்டிய மேல் நடவடிக்கைகள் தொடர்பாக சட்ட ஆலோசனை பெற்றுக் கொள்வதற்காகவும் ரூபா 470,177 ஆனகடன் தொகை அறவிடப்படுவதற்கு அவரின் பிணை வைத்தவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ii) | 2022 ஏப்ரல் 04 திகதிய 5/2022 ஆம் இலக்க நிதி அமைச்சு சுற்றறிக்கை | 3,038,690 | அரசாங்க ஆதனங்கள் காணாமல் போதல் மற்றும் முறைகேடான பயன்பாட்டினை தவிர்த்தல் போன்று அவற்றினை உயர்மட்ட வினைத்திறனுடன் பயன்பாட்டிற்கு எடுப்பதனை உறுதி செய்வதற்கு நிறுவன தலைவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள போதிலும், அதற்கு முரணாக ரூபா 3,038,690 | இந்த வண்டி தற்காலிக அடிப்படையில் சனாதிபதி அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கிரயமான N1SSAN SYLPHY வகையான மோட்டார் வாகனம் நிறுவனங்கள் இடையே முறையான சொத்து பரிமாற்றமின்றி 2022 திசெம்பர் 05 ஆந் திகதி சனாதிபதி செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 தூரநோக்கும் செயற்பணியும்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1969 ஜனவரி 16 திகதிய 01 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தினால் நிறுவப்பட்ட திணைக்களத்தின் குறிக்கோள், தூர நோக்கு மற்றும் சேவைகளின் படி இலங்கை பொருளாதாரத்திற்கு பிரதிகூலமாக தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இறக்குமதிகள் ஏற்றுமதிகளை கட்டுப்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், ஒவ்வொரு விடயம் தொடர்பாக அரச நிறுவனங்களினால் வெளியிடப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் மாத்திரம் இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. மேலும், திணைக்களத்தை நிறுவியதன் அடிப்படைக் குறிக்கோள்களை நிறைவேற்றக்கூடிய முறையில் செயற்படுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியான நடைமுறையொன்று அல்லது நடவடிக்கைமுறையொன்று தயாரித்திருக்காததுடன், அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்தல் முக்கிய கருமம் என கவனம் செலுத்தி | இந்த திணைக்களத்தின் குறிக்கோள், தூரநோக்கு பிரகாரம் பொருளபதாரத்திற்கு பிரதிகூலமான தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய இறக்குமதிகள் மற்றும் ஏற்குமதிகளை கட்டுப்படுத்துவது போன்று நாட்டின் பாதுகாப்பு, பொதுமக்கள் சுகாதாரம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பிற்கு பிரதிகூலமான தாக்கத்தை ஏற்படுத்தும் இறக்குமதிகள் ஏற்றுமதிகளளை கட்டுப்படுத்துவதும் உள்ளடங்கும். அதன் பிரகாரம் மேற்படி விடயங்களுக்கு தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாட்டிற்கு அவ் விடயம் தொடர்பாக நிபுணத்துவ அறிவுடைய மற்றும் அதனுடன் நேரடியே தொடர்புக் கொள்ளும் நிறுவனமொன்றுடன் அல்லா் நிறுவனங்கள் சிலவற்றிடமிருந்து பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டு இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதுடன் அப் பரிந்துரைகள் பெற்றுக் கொடுக்கும் போது அவர்கள் | 1969 ஜனவரி 16 திகதிய 01 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் திணைக்களம் நிறுவிய குறிக்கோள்கள், தூர நோக்கு மற்றும் சேவைகளின் படி பிரதிகூலமான இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளை கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நாட்டின் ஒட்டுமொத்த நுகர்வுகளின் எதிர்வுகூரல் மேற்கொண்டு தரக் கட்டுப்பாடு (Quality Control) மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | பின்பற்றும் முறைகள் மற்றும் குறிக்காட்டிகள் தொடர்பாக ஒருங்கிணைப்பொன்று இந்த திணைக்களத்தினால் பேணிச் செல்லப்படுகின்றது. |

**3.2 திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் பணிப்பொறுப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இறக்குமதி கட்டுப்பாட்டிற்குரிய விதிமுறைகள் உள்ளடக்கப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடல் திணைக்களத்தின் பொறுப்பு மற்றும் பணிப்பொறுப்பாக காண்பிக்கப்படுகின்ற போதிலும், இறக்குமதி கட்டுப்பாட்டிற்குரிய பணிகளில் மட்டும் ஈடுப்பட்டுள்ளதுடன் 2017 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்றுமதிக்குரிய எந்தவொரு விதிமுறைகளும் வெளியிடப்பட்டமை கணக்காய்வினால் அவதானிக்கப்படவில்லை. | இந்த திணைக்களம் பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளின் கட்டுப்பாட்டின் ஊடாக இந் நாட்டு பொருளாதாரத்திற்கு பிரதிகூலமான தாக்கத்தினை ஏற்படுத்தும் நிலைமைகளை கட்டுப்படுத்தல் போன்று நாட்டின் பாதுகாப்பு, பொதுமக்கள் சுகாதாரம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பிற்கு பிரதிகூலமான நிலைமைகளை கட்டுப்படுத்துவதும் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் போது அதிக தாக்கம் ஏற்படுவது இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யும் பொருட்கள் தொடர்பாக என்பதனால் அதிக கவனம் செலுத்தப்படுவதோடு இந்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் சில மட்டும் 2044/41 மற்றும் 2017.11.09 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிக்கை பிரகாரம் ஏற்றுமதி கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. | திணைக்களம் தாபித்தலின் பொறுப்பு மற்றும் பணிப்பொறுப்புக்கள் முறையாக அடைவதற்கு முயற்சி எடுக்கப்படல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 அரச கணக்குகள் குழுவின் கட்டளைகளை செயற்படுத்துதல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | ஆக்கபூர்வமான தகவல் தொழில்நுட்ப முறைமையொன்றை பயன்படுத்தி அரச வருமானம் சேகரித்தல், முன்னேற்றுவதற்காக தரப்பினர்களினால் மற்றும் தரப்பினர்களுடன் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கான 2016 நவம்பர் மாதம் 23 திகதிய பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரச கணக்குகள் தொடர்பான குழுவின் இடைக்கால அறிக்கையின் கட்டளையின் படி ‘‘இருபத்தெட்டு நிறுவனங்களுடன் தொடர்புகள் மேற்கொண்டு, அனுமதிப்பத்திரம் வழங்கும் போது குறிப்பிட்ட நிறுவனத்தில் இருந்து இணையம் ஊடாக பரிந்துரைக் கடிதங்கள் மேற்கொள்வதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என’’ அறிவித்து இருந்த போதிலும் அந்தப் பரிந்துரை கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 31 திகதி அளவிலும் செயற்படுத்தியிருக்கவில்லை. | புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் கணினி அமைப்பு தயாரிப்பதற்குரிய மென்பொருள் அபிவிருத்தி செய்யும் அடிப்படை நடவடிக்கைகள் 2024 மார்ச் மாதம் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் அவ் அமைப்பினுள் பரிந்துரை பெற்றுக் கொடுக்கும் நிறுவனங்கள் அனைத்தும் ஒருங்கிணைத்துக் கொள்வதற்கு இயலுமான வகையில் இடைமுகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. புதிய அமைப்பு அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் பணிக்காக பயன்படுத்தும் வரையில் பரிந்துரைக்கப்பட்ட நிறுவனங்கள் ஊடாக பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளும் போது நேரடியே மின்னஞ்சல் முகவரியூடாக பரிந்துரைகள் திணைக்களத்திற்கு கொண்டுவரப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்க கணக்குகள் குழுவின் இடைக்கால அறிக்கையின் கட்டளைகளுக்கு இணங்குதல் வேண்டும். |
| **(ஆ)** | பரிந்துரைக்கப்பட்ட காலம் கடந்த வாகனங்கள் மற்றும் பகுதிகளாக்கப்பட்ட வாகனங்கள் இறக்குமதிக்கான கொள்கையொன்று தயாரிக்குமாறு 2024 சனவரி 23 ஆந் திகதி நடந்த அரசாங்க கணக்குகள் குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான கொள்கையொன்று தயாரிக்கப்பட்டிராததுடன் மருந்துகள் உற்பத்திற்கு கொண்டு வரப்படுகின்ற ஸ்பிரிட்கள் தொடர்பான பின்னூட்டல் நடவடிக்கை எடுக்கப்படுமாறு அறவிக்கப்பட்டிருந்த போதிலும், அதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் இறக்குமதிக்கான தேசிய கொள்கையொன்று தயாரித்தல் சனாதிபதி செயலகத்தினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றின் ஊடாக மேற்கொண்டு செல்லப்படுவதுடன் அவ் அறிக்கை வெளியிடப்பட்டவுடன் அதற்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | அரசாங்க கணக்குகள் குழுவின் கட்டளைகளுக்கு இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சீ ஷெல்ஸ் தொடக்கம் தாய்லாந்து வரை போக்குவரத்து செய்யப்பட்ட மீன்களைக் கொண்ட கொள்களன்களை உடைய கப்பலொன்று கொழும்பு துறைமுகத்திற்கு அண்மையான பிரதேசத்தில் தொழிநுட்ப கோளாறுக்கு முகம் கொடுத்து மின்சார வழங்கலானது துண்டிக்கப்பட்டமையின் காரணத்தினால் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு கிட்டி சேர்ந்திருந்ததுடன் வெளிநாட்டு கப்பலின் தேசிய பிரதிநிதி ஊடாக தேடியறியப்பட்ட தேசிய தனியார் நிறுவனமொன்றிற்கு திணைக்களத்திடமிருந்து வழங்கப்பட்ட இறக்குமதி அனுமதிப்பத்திரம் அடிப்படையில் கரிம உரம் உற்பத்திக்காக இந்த மீன் கொள்களன்கள் 2022 மார்ச் 09 ஆந் திகதி விற்கப்பட்டிருந்தமை தொடர்பாக 2024 சனவரி 23 ஆந் திகதி அரசாங்க கணக்குகள் குழுவினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட பின்வரும் கட்டளைகள் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.<br><br>- அகற்றப்பட்ட மீன் பகுதிகள் பயன்படுத்தப்பட்டு உரம் உற்பத்தி செய்யப்படும் குறித்த நிறுவனத்தினால் தற்போது எந்தளவு உரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதென வெளிகள புலனாய்வு செய்யப்பட்டு அறிக்கையொன்று சமர்ப்பித்தல்.<br><br>- கரிம உர உற்பத்திற்காக பயன்படுத்தாத மீன்-கழிவுகளை (Fish-Waste) கொண்ட 15 கொள்களன்கள் தொடர்பாக தேடிறியப்பட்டு கைதவிர்ப்பிற்கு முறையான நடவடிக்கைகள் எடுத்தல். | அரசாங்க கணக்குகள் குழுவினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட ஆலாசனை பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பிரநிதியொருவரும் உள்ளடங்கும் வகையில் நியமிக்கப்பட்ட வெளிகள புலனாய்வு குழுவினால் வெளிகள புலனாய்வுக் 2024.03.25, 2024.04.29 மற்றும் 2024.04.30 ஆந் திகதிகளில் நடத்தப்பட்டது. அதன் போது புலனாய்வின் விபரங்கள் உள்ளடங்கிய அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு வருவதுடன், அவ் அறிக்கை பெறப்பட்ட பின்னர் உங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. அவ்வாறே கரிம உரம் உற்பத்திற்காக பயன்படுத்தப்படாத மீன்-கழிவுகள் உள்ளடங்கிய 15 கொள்களன்கள் சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் மிகவும் வரைவாக கைதவிர்ப்பு செய்வதற்கு ஆரம்பிக்கப்படுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அரசாங்க கணக்குகள் குழுவின் கட்டளைகளுக்கு இணங்குதல் வேண்டும். |